**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

## ஆண்டு 6

| | | |
|---|---|---|
| நேரம்: 120 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்: 100** (எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) | **பக்கங்கள்** 16 |
| நாள்: 01.06.2024 | | |

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.

1. உலகின் செம்மொழிகளுள் ஒன்று

☐ தமிழ்　☐ ஆங்கிலம்　☐ மலையாளம்

2. ஆ, ஊ, ஈ, ஐ, ஓ, ஔ ஆகிய எழுத்துகள்

☐ நெட்டெழுத்துகள்　☐ குற்றெழுத்துகள்　☐ மெய்யெழுத்துகள்

3. கதிரவன், நிலவு ஆகியவை

☐ இரு அறம்　☐ இரு சுடர்　☐ இரு திணை

4. தன்னை அழித்து மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுப்பது

☐ மெழுகுதிரி　☐ மின்குமிழ்　☐ விண்மீன்

5. நான் என்னும் சொல்லுடன் ஐ சேர்த்தால் வருவது

☐ என்னை　☐ நானை　☐ நான்னை

6. பனையின் பொருள்களுள் ஒன்று

☐ இளநீர்　☐ நுங்கு　☐ தேங்காய்

7. இயற்கை என்பதன் எதிர்ச்சொல்

☐ கற்கை　☐ செயற்கை　☐ வாழ்க்கை

8. பல உலகத் திறவினைகளை நிலைநாட்டியவர்

☐ காசி ஆனந்தன்　☐ பாவேந்தர்　☐ ஆழிக்குமரன் ஆனந்தன்

9. எல்லாள மன்னனால் கட்டப்பட்ட குளம்

☐ இரணைமடுக்குளம்　☐ வவுனிக்குளம்　☐ கனகராயன்குளம்

10. இருபதாம் நூற்றாண்டின் சிறந்த கவிஞர்களுள் ஒருவர்

☐ திருவள்ளுவர்　☐ ஔவையார்　☐ பாரதிதாசன்

11. ஆழம் அறியாமல் காலை விடாதே என்பது

- [ ] பழமொழி
- [ ] விடுகதை
- [ ] நாலடியார்

12. பொருட்பெயர்ச் சொற்களுள் ஒன்று

- [ ] சிவப்பு
- [ ] சதுரம்
- [ ] நூல்

13. செவிக்கு இன்பம் ஊட்டும் வகையில் எழுதப்படுவது

- [ ] வரலாறு
- [ ] இலக்கணம்
- [ ] கவிதைகள்

14. நிகழ்காலத்தை உணர்த்தும் சொல்

- [ ] வந்தான்
- [ ] வருவான்
- [ ] வருகின்றான்

15. தோலை உரித்தாலும் அழாத இவன், உரித்தவரைக் கண்ணீர் விடவைப்பான். இவன்

- [ ] கத்தரிக்காய்
- [ ] அன்னாசி
- [ ] வெங்காயம்

16. கடல், சக்கரம், மோதிரம் என்பன குறிக்கும் ஒரு சொல்

- [ ] ஆழி
- [ ] வளையல்
- [ ] நகை

17. தாய்மண்ணின் சிறப்பைக் கவிதைகள் ஆக்கியவர்

- [ ] இராமலிங்கப்பிள்ளை
- [ ] முத்துக்குமார்
- [ ] புதுவை இரத்தினதுரை

18. மேழி என்பதன் பொருள்

- [ ] கலப்பை
- [ ] மண்வெட்டி
- [ ] உழவன்

19. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்

- [ ] நட
- [ ] உண்
- [ ] ஆடு

20. முற்காலத்தில் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்பட்ட இசைக்கருவி

- [ ] பறை
- [ ] புறா
- [ ] மரதன்

20 X 1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.

1. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.
2. கோதை அழகான நடனத்தை ஆடினாள்.
3. நாங்கள் நல்ல நூல்களைத் தேடிக் கற்போம்.
4. தமிழர் இலக்கியங்களைப் போற்றினர்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | திருவள்ளுவர் | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | இலக்கியங்களை | |

10 X1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.

ஆகையால் | அழகாக | அறிந்திருந்தனர் | பள்ளிக்கு | வண்ண வண்ண

1. நான் ______________ மிதியுந்தில் செல்வேன்.

2. நுண்கற்கால மக்கள் உப்பின் பயன்பாட்டை ______________.

3. தமிழ் எங்கள் தாய்மொழி. ______________ நாம் விருப்புடன் படிப்போம்.

4. தோட்டத்தில் பூக்கள் ______________ க் காட்சியளித்தன.

5. சிறுமிகள் ______________ ச் சட்டைகள் அணிந்திருந்தார்கள்.

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. King | 1. König | 1. Konge |
| 2. People | 2. Leute | 2. Folk |
| 3. Island | 3. Insel | 3. Øy |
| 4. Language | 4. Sprache | 4. Språk |
| 5. Words | 5. Wörter | 5. Ord |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
|---|---|---|
| 1. Re | 1. Koning | 1. Konge |
| 2. opolo | 2. Mensen | 2. Folk |
| 3. Isola | 3. Eiland | 3. Ø |
| 4. Lingua | 4. Taal | 4. Sprog |
| 5. Parole | 5. Woorden | 5. Ord |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
|---|---|---|
| 1. Kung | 1. Kuningas | 1. |
| 2. Folk | 2. Ihmise | 2. |
| 3. Ö | 3. Saari | 3. |
| 4. Språk | 4. Kieli | 4. |
| 5. Ord | 5. Sanat | 5. |

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழர் வாழும் நாடுகள் இரண்டு எழுதுக.

2. மாவீரர் என்போர் யாவர்?

3. ஈழத்தில் தமிழரது மூதாதையர்கள் யாவர்?

4. எல்லாள மன்னனின் ஆட்சிக் காலத்தில் ஈழத்தின் தலைநகரம் எது?

5. இலக்கண அடிப்படையில் பால் எத்தனை வகைப்படும்?

6. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   தோன்றல் புணர்ச்சி:

   திரிதல் புணர்ச்சி:

7. வினாச்சொல்லியம் ஒன்று எழுதுக.

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தோட்டம் நல்ல தோட்டம் - நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்
கூட்டமாக நாமும் - ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டம்.
பள்ளி முடிந்த உடனே - முன்
பாய்ந்தே ஓடி வருவோம்
புள்ளி மானைப் போல - நாமும்
துள்ளிக் குதித்து மகிழ்வோம்
வண்ண வண்ண மலரால் - நம்மை
மகிழ வைக்கும் செடிகள்!
தின்னத் தின்ன பழங்கள் - மேலும்
தின்னக் கொடுக்கும் மரங்கள்!

- அழ.வள்ளியப்பா

1. நம்மைச் சொக்க வைப்பது எது?

2. பள்ளி முடிந்தபின் எப்படி ஓடி வருவோம்?

3. நாம் எதைப் போலத் துள்ளிக் குதிப்போம்?

4. நம்மைச் செடிகள் எதனால் மகிழ வைக்கும்?

5. மரங்கள் எவற்றைக் கொடுக்கும்?

5 X 2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. பாவேந்தர்
2. தமிழர் பண்பாடு
3. கல்வியின் சிறப்பு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**
- கல்வியின் வகைகளும் பெறும் வழிகளும்
- கல்வி அழிவில்லாத செல்வம்
- கல்வியின் பயன்கள்

4. சுற்றுலா

**உள்ளடக்கக் குறிப்புகள்:**
- அணியம் செய்தல்
- சென்ற இடங்களும் பார்த்த காட்சிகளும்
- பெற்ற பயன்கள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1** **பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தேனீக்கள் பூக்களைத் தேடிப் பறந்து திரியும் சிறிய உயிரிகள் ஆகும். இவற்றின் மூளை மிகவும் சிறியது. தேனீக்களுக்குப் பறக்கவும் நடக்கவும் முகரவும் தெரியும். நாம் தேனீக்களின் கூடுகளை மலைச்சரிவுகளிலும் மரங்களிலும் காணலாம். அவற்றைத் தேன் கூடுகள் என்று அழைப்போம். ஒரே கூட்டில் ஆயிரக்கணக்கான தேனீக்கள் சேர்ந்து வாழ்கின்றன. தேனீக்களின் கூட்டத்திற்கு ஒரு தலைவி இருக்கும். அதனுடன் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக தேனீக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றன. எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் தேன் இருக்கும் பூக்களைக் கண்டுபிடிக்கும் திறமை தேனீக்களுக்கு உண்டு. அவை பூக்களில் உள்ள தேனைக் கொண்டு வந்து தேன் கூட்டில் சேர்க்கின்றன. அந்தத் தேனையே நாம் சுவைக்கிறோம். தேனில் மருத்துவக் குணங்கள் நிறைய உண்டு. அதனால், தேனை மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

1. தேனீக்கள் எவற்றைத் தேடிப் பறந்து திரியும்?

   ______________________________

   ______________________________

2. தேனீக்கள் கூட்டுக் குடும்பமாக எவ்வாறு வாழ்கின்றன?

   ______________________________

   ______________________________

3. தேனீக்களின் கூடுகளை எங்கே காணலாம்?

   ______________________________

   ______________________________

4. தேனீக்கள் எதைக் கொண்டு வந்து கூட்டில் சேர்க்கின்றன?

   ______________________________

   ______________________________

5. தேனை எவற்றுக்குப் பயன்படுத்துகிறார்கள்?

   ______________________________

   ______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பிறந்தநாள் அழைப்பு அஞ்சலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.

நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
06.08.2024

அன்பு நண்பன் மாதவனுக்கு,

வணக்கம்.

உங்கள் நலம் அறிய ஆவலாக உள்ளேன். நான் எனது பள்ளி விடுமுறைக்கு உங்களிடம் வருவதாக இருக்கின்றேன். அங்கு எனது பிறந்தநாளை உங்களோடு சேர்ந்து கொண்டாட உள்ளேன். எனது பதினோராவது பிறந்தநாள் மறக்கமுடியாத நாளாக இருக்கும் என நம்புகின்றேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்,
நகுலன்.

1. மாதவன் விடுமுறைக்கு நண்பனிடம் செல்லவுள்ளார். ( )
2. நகுலன் யாழ்ப்பாணத்தில் வாழ்கிறார். ( )
3. அஞ்சலை எழுதியவர் மாதவன். ( )
4. நகுலன் பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். ( )
5. நகுலனது நண்பன் மாதவன். ( )

5 X 1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |